**தமிழ் நாடு அரசு**

**சுருக்கம்**

வனம் – வன உயிரினம் – குற்றலாத்தில் உள்ள பழத் தோட்ட அருவி (VIP Water falls) மூத்த அலுவலர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் குளிக்க அனுமதி அளித்தல் – ஓர் ஆண்டு காலத்திற்கு நீடித்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

சுற்றுச் சூழல் மற்றும் வனத் (வனம்.5) துறை

அரசாணை (நிலை) எண். 90 நாள்.29.8.2008

பார்வை:

1. அரசு (நிலை) எண்.153, சுற்றுச் சூழல் வனத்துறை, நாள்.30.7.2002
2. அரசாணை (நிலை) எண்.110, சுற்றுச் சூழல் வனத் துறை, நாள்.13.7.2005.
3. முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கடித எண்.TS4/43218/06, நாள். 28.8.2006.
4. முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கடித எண். TS4/10866/2008 நாள் 7.3.2008

--------------

**ஆணை:-**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், குற்றாலம் பழத்தோட்ட அருவியில் மூத்த அலுவலர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் (V.I.P.) ஆகியோர் திருநெல்வேலி மாவட்ட வன அலுவலரின் அனுமதியின் பேரில் குளிக்க ஒரு வருட காலம் பரிசோதனை அடிப்படையில் அனுமதித்து ஆணையும், அத்தகைய நபர்கள் எண்ணிக்கை மற்றும் குளிக்கும் கால அளவு ஆகியவற்றை குற்றால வனச்சரகர் நிர்ணயித்து, அனுமதி வழங்குவார் என்றும் அறிவுரையும் வழங்கப்பட்டன. பார்வை இரண்டில் காணும் அரசாணையில் மேற்கண்ட அனுமதியானது மேலும் ஒரு வருட காலத்திற்கு நீடித்து ஆணை வழங்கப்பட்டது.

2. குற்றாலம் இயற்கை வனவளம் நிறைந்த சுற்றுலா ஸ்தலமாகும். எனவே பழத்தோட்ட அருவியில் மூத்த அலுவலர்கள் மற்றும் மிக முக்கியஸ்தர்கள் மட்டும் குளிப்பதற்கு மேலும் ஒரு ஆண்டு காலம் நீட்டித்து அரசு ஆணை வழங்குமாறு பார்வை 3ல் படிக்கப்பட்ட கடிதத்தில், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் அரசுக்கு கருத்துரு அனுப்பியிருந்தார். இதற்கிடையில் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் அவர்கள் மேற்படி பழத்தோட்ட அருவி திறக்கப்பட்டால் ஐந்தருவி மாசுபடும் என்ற காரணத்தினாலும் மேற்படி அருவி காப்பு காட்டினுள் இருப்பதாலும், மேலும் முக்கியஸ்தர்களை கண்டறிவதில் சிரமம் உள்ளதாலும் மேலும் சில காரணங்களுக்காகவும் அனுமதி வழங்க வேண்டாம் என பார்லை நான்கில் படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் கருத்து தெரிவித்திருந்தார்.

த.பி.பா.

3. எனினும், அரசு இது குறித்து மீண்டும் சுயமாகவும் கவனமாகவும் பரிசீலித்து குற்றாலம் பழத்தோட்ட அருவியில் மூத்த அலுவலர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் (V.I.P.) மட்டும் குளிப்பதற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதியை மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டித்து அரசு ஆணை வழங்குகிறது.

4. ஓராண்டு காலத்திற்குப் பின்னர் மேலே பத்தி 3ல் கண்ட ஆணையின் செயல்பாட்டினை ஆய்வு செய்து, மேலும் நீட்டிப்பது குறித்து தக்க செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்புமாறு முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

/ஆளுநரின் ஆணைப்படி/

ந.சுந்தரதேவன்
முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மை தலைமை வனப் பாதுகாவலர்,சென்னை—15.
தலைமை வன உயிரினக் காப்பாளர், சென்னை—15.
இயக்குநர், தோட்டக் கலைத் துறை, சென்னை—2
மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி
மாவட்ட வனச்சரகர், திருநெல்வேலி
வனச் சரகர், குற்றாலம்.
இ.கோ/உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்